**நீதி, சிறைச்சாலை விடயங்கள் மற்றும்**
**அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை**

# பதவி வெற்றிடங்கள்

2023 இல. 10 குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள் சாட்சியாளர்களுக்கு உதவி புரிதல் மற்றும் பாதுகாப்பதற்கான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையில் காணப்படும் பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட சேர்த்துக் கொள்ளும் முறைமையின் பிரகாரம் தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்த அடிப்படை) HM 2-3 (பதவி 01)

**தகைமை மற்றும் அனுபவம்**

சட்டம், நிர்வாகம் அல்லது குற்றவியல் ஆகிய துறைகளில் ஒன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக இருத்தல்

**அத்துடன்**

குறித்த பாடத்துறையில் பட்டப் பின்படிப்பைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டதாரி தகைமையை பெற்ற பின்பு அரச, அரச கூட்டுத்தாபன, நியதிகள் சபை அல்லது குறித்த அரச சார்பற்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ‘முகாமைத்துவ மட்டப் பதவிகளில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (குறைந்த பட்சம் இதில் 05 வருடமாவது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM) இருத்தல் வேண்டும்)’

**வயதெல்லை**

35 வயதிற்கு குறையாது 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்

**சம்பள அளவு**

HM 2-3, 2016 சம்பள அளவில் ஆரம்ப சம்பள கட்டம் பொருந்தும். ரூ. 98,215.00 + வாழ்க்கைச் செலவு (அரசாங்க ஓய்வூதியம் பெறும் அதிகாரியொருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படின் அவ் அதிகாரிக்கு ஓய்வூதியப்படியுடன் குறித்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு கிடைப்பதுடன் இப்பதவிக்கு மீண்டும் நியமிப்பதன் கீழ் ஓய்வூதியப் படியுடன் கிடைக்கும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் மிகுதிப் பகுதி அவர் பெறும் மாதாந்தக் கொடுப்பனவுடன் வழங்கப்படல் வேண்டும்) இப்பதவிக்காக உத்தியோகபூர்வ வாகனம் அல்லது அதற்கான போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிடைக்க வேண்டிய அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் உரித்தாகும்.

**நிபந்தனைகள்**

01. மேற்படி பணிப்பாளர் நாயகப் பதவிக்கு சேர்த்துக் கொள்ளும்போது தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கட்டமிடப்பட்ட நேர்முகத்தேர்விற்கு கோரப்படுவதுடன் அங்கு கீழ்க்காணுமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| குறித்த மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக கல்வி/தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| ஏனைய குறித்த செயறறிறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| நேர்முகத்தேர்வில் காட்டப்படும் திறமை | 25 புள்ளிகள் |
| முழுப் புள்ளிகளின் எண்ணிக்கை | **100** |

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2024.08.09) இத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

02. சகல விண்ணப்பதாரிகளும்
    I. இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
    II, பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை சரியாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல், உள, தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    III. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
03. மேற்படி தகைமைகள் மற்றும் பதவியுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்காக நீங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
05. விண்ணப்பதாரிகளால் தேவையற்ற வற்புறுத்தல் மேற்கொள்ளல் அல்லது விசாரணைகள் மேற்கொள்ளல் விண்ணப்பங்கள் நிராகரிப்பதற்கு காரணம் ஆகும்.
06. விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு கிடைக்காத சகல விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாத சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள் தொழில்சார் தகைமைகள் மற்றும் சகல தகவல்களும் அடங்கிய உங்களால் தயாரிக்கப்பட்ட சுய தரவு குறிப்பு சகல சான்றிதழ்களின் பிரதியுடன் மின்னஞ்சல் மூலம் chairman.japvcw@gmail.com மற்றும் பதிவுத் தபாலில் தலைவர், குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை 428/11ஏ, முதலாம் மாடி, டென்சில் பொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2024.08.09 இற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும்**
**சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை,**
**428/11ஏ, முதலாம் மாடி, டென்சில் பொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல.**
**தொ.பே. - 011 2879539**

திகதி: 2024.07.26